**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**S.T.C. No. 534 /2022 PW .3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெள்ளைச்சாமி | தந்தை/கணவர் பெயர்: முருகன் | |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.06.2026

---

**(1,2 எதிரிகள் ஆஜர். 3 மற்றும் 4 எதிரிகள் ஆஜரில்லை. 3 மற்றும் 4 எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**04.06.2026 முதல் விசாரணை:**

1. நான் தற்போது எஸ். புதூரில் குடியிருந்து சென்டிரிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா ஆவார். எதிரிகளைத் தெரியும். எனது பக்கத்து வீட்டுகாரர்கள். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் நான் திருவிழாவில் இருந்த போது எங்கள் வீட்டின் அருகே குடியிருப்பவர்கள் எனக்கு போன் செய்து எனது அப்பாவை தங்கையா அடித்து விட்டதாக கூறினார். தகவல் தெரிந்தவுடன் நானும், எனது அம்மாவும் வீட்டிற்கு வந்தோம். வந்த போது எனது அப்பாவிற்கு காலிலும், உடலிலும் காயம் ஏற்பட்டு இருந்தது.

2. எனது அப்பாவிடம் விசாரித்த போது எங்கள் வீட்டின் அருகே உள்ள பாதையை எதிரிகள் உபயோகித்தால் அது குறித்து கேட்டததற்கு பழனிகுமார் எனது அப்பாவை பிடித்து தள்ளி விட்டார் என்றும், மற்ற எதிரிகள் எனது அப்பாவை அடித்தார்கள் என்றும், என் அப்பா என்னிடம் கூறினார். அன்றையை தினமே மதியம் எனது அப்பாவை பொன்னமராவதி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

3. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நாளுக்கு மறுநாள் போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீஸ் விசாரிணையில் சம்பவம் குறித்து எனது அப்பா போனில் தகவல் சொல்லி தெரிந்தது என்று நான் சொல்லவில்லை. போலீஸ் விசாரணையில் காலிலும், உடம்பிலும் காயம் இருந்த விவரத்தை சொல்லியுள்ளேன். பழனிக்குமார் எனது அப்பாவை கீழே தள்ளி விட்டார்

என்ற விவரத்தை சொல்லியுள்ளேன். நான் எனது அப்பாவை மருத்துவமனைக்கு மதியம் 2.00 மணிக்கு அழைத்து சென்றேன். எனது அப்பா நான் போவதற்கு முன்பாகவே புகார் கொடுத்து விட்டார் . அந்த விவரம் எனக்கு தெரியாது. எங்களுக்கும், எதிரி குடும்பத்திற்கும் பாதை பிரச்சனை இருந்தது என்றால் சரிதான்.

4.அது பொது பாதை என்றால் இல்லை. எங்கள் பங்காளி 3 வீட்டிற்கும் மட்டும் தான் பாதை உள்ளது. பாதைக்குரிய வருவாய் ஆவணங்கள் காவல் நிலையத்தில் விசாரணையின் போது ஒப்படைத்தேனா என்றால் இல்லை. வருவாய் ஆவணங்களில் பாதை என்று உள்ளது. நான் சொல்வது போல் எனது அப்பாவை யாரும் தாக்கவில்லை என்றாலும் குடிபோதையில் விழுந்து காயத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் அ.சா.1 எனது தந்தை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.